4. அறிக்கைகள் அளித்தல்

(அ) அவை உரிமைக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். உரிமைக் குழுவின் அறிக்கையை அளித்தல், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், உரிமைக் குழுவின் தலைவர்.

மாண்புமிகு திரு. ச. காந்திராஜன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை உரிமைக் குழுவின் சார்பில், உறுப்பினர் திருமதி ஜீனத் சர்புதீன் அவர்கள் எழுப்பியுள்ள உரிமை மீறல் பிரச்சனையின் மீதான குழுவின் அறிக்கையை அவைக்கு அளிக்கிறேன்.

அறிக்கையினை அச்சிட்டு அளிக்க, போதிய கால அவகாசம் இன்மையால் தட்டச்சுச் செய்யப்பட்ட அறிக்கையின் நகல்கள், சட்டமன்ற நூலகத்தில் உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. அறிக்கை பின்னர் அச்சடிக்கப்பட்டு, பேரவை உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி கே. மரியம் உல் ஆசியா, மதிப்பீட்டுக் குழுவின் தலைவர்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பீட்டுக் குழுவின் இருபதாவது, இருபத்தொன்றாவது மற்றும் இருபத்திரண்டாவது அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தால், அறிக்கைகளை அச்சிட்டு அளிக்க இயலவில்லை. அறிக்கைகளின் நகல்கள் உறுப்பினர்களின் பார்வைக்காக சட்டமன்ற நூலகத்தில் வைக்கப்பெற்றுள்ளன. அச்சடித்த நகல்கள், பின்னர் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே. செல்வராஜ், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.